மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 182, திரு. ஏ. எம். பரமசிவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

182—

வாடிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்.

*9071—திரு. ஏ. எம். பரமசிவன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக நிலை உயர்த்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் 30—3—1992 முதல் அரசு வட்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

திரு. ஏ.எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தியதற்கு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாடிப்பட்டி தாலுக்கா மருத்துவமனையாக இருப்பதால், அங்கே அறுவைச் சிகிச்சை அரங்கு ஏற்படுத்தப்படுமா ? மேலும் அங்கே சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தது, இப்போது தாலுக்கா மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அங்கே தேவையான வசதிகளை படிப்படியாகத் தான் செய்யவேண்டியிருக்கும். ஸ்பெசலிஸ்டுகளைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு மருத்துவமனையிலும் என்னென்ன ஸ்பெசலிஸ்டுகள் இருக்கவேண்டும் என்று ஒரு நடைமுறையை செயல்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. எல்லா இடத்திலேயும் ஒரேமாதிரியான ஸ்பெசலிஸ்டுகள் இருக்கவேண்டும் என்ற நிலையை எடுத்திருக்கிறது. எனவே,

1993 மார்ச் 31]

அந்தக் கொள்கை அடிப்படையிலே நிச்சயமாக தாலுக்கா மருத்துவமனையாக இருக்கின்ற வாடிப்பட்டி மருத்துவ மனைக்கு அந்த வசதிகள் எல்லா இடத்திலேயும் கிடைக்கிற நேரத்திலே, அங்கேயும் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 183, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

183—

கல்வராயன் மலைப் பகுதியில் பரவி வரும் காலரா நோயைத் தடுக்கும் நடவடிச்கை.

*10139—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப் பகுதியில் அடிக்கடி காலரா நோய் பரவி வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) 1991-ல் காலராவில் இறந்தவர்களின் குடும்பத் திற்கு அரசு உதவி செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காலரா/வாந்திபேதி போன்ற நோய்களின் அறிகுறி இப்பகுதியில் தென்பட்டால் களப்பணியாளர்கள் இப் பகுதிக்கு விரைந்து அனுப்பப்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப் படுத்தப்படுவதுடன், அவர்கள் வீடுகளில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு, மேலும் அந்நோய் ஏனைய இடங்களில் பரவாவண்ணம் அனைத்துத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஆ) இம்மாதிரி நோயால் மரணம் அடைந்தவர்களுக்கு அரசு நிதி உதவி வழங்குவதில்லை.

திரு. சி. இராமசுவாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் அடிக்கடி காலரா நோய் பரவி பல பேர்கள் இறக்கிறார்கள். மலைவாழ் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். 1991 ஆம் ஆண்டில், சுமார் 20 பேர்கள் இறந்துவிட்டதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. அந்த 20 பேர்கள் குடும்பத்திற்கும் நிதி உதவிசெய்ய